**Date: 24.09.2024**

**MCOP. No. 53 /2022**

**PW.2**

**Name: பன்னீர்செல்வம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கபடுகிறார்.**

**1 மற்றும் 2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். தற்போதும் நான் அரசிடமிருந்து ஓய்வூதியம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய நிருபணவாக்குமுலத்தில் நான் பயணித்த டிஎண்.65 வி 9706 என்ற வாகனம் எனது சொந்தமான வாகனம் என குறிப்பிட்டு இருந்தால் அது தவறு. விபத்து ஏற்படுத்திய வாகனம் எது என்று நான் உடன் வந்த உறவினர் சொல்லி தெரிந்துகொண்டேன். விபத்தில் எனது மகனுக்கு ரத்தக்காயம் , சீராய்ப்பு காயம் மட்டும் ஏற்பட்டது என்றால் சரியல்ல, பெரிய காயம் ஏற்பட்டது. நான் சொல்வது போல் எனது மகனுக்கு பெரிய காயம் ஏற்படவில்லை என்றாலும் உண்மையிலே அவ்வாறு ஏற்பட்டிருந்தால் நிருபணவாக்குமுலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு சீராய்ப்பு காயம் மட்டும் ஏற்பட்டது. பரமக்குடி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன். எனது மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது மகன் தற்போது வேலைக்கு செல்லவில்லை. நண்பர்கள் டிரைவர் வேலைக்கு அழைக்கும் போது தற்போது சென்றுவருவது வழக்கம். எனது மகன் வேலைப்பார்த்த எம்.ஆர்.எப் டயர் கம்பேனி என்பது ஒரு தனியார் நிறுவனம் ஆகும். எனது மகன் கம்பேனியில்

டெம்பவரியாக வேலை பார்த்தார் என்றால் சரிதான். அந்த பணி தற்காலிக பணிஎன்பது எனது மகன் அந்த கம்பேனியில் வேலை செய்து வந்தததால் இத்தனை வருடங்களில் எனது மகன் இவ்வளவு பணம் வருமானம் ஈட்டியிருப்பார் என்று சரியாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. விபத்தானது எனது மகன் கவனக்குறைவால் நடந்தது என்றாலும் 1 வது எதிர் மனுதாரரின் கவனக்குறைவால் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து சம்பந்தமாக 1, 2 வது எதிர் மனுதாரர்கள் எந்த வித இழப்பிடும்கொடுக்க கடமை ப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.09.24 18:55:00 +0530

Chief Judicial Magistrate

Sivagangai